**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். CC. 401 /2018**

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01ம் தேதி செவ்வாய் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கண்ணன் | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : ராமசாமி | சமயம் | : |
| கிராமம் | : சீயம்பூண்டி | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 84 |

தேதி 01.08.2023

**( 1 முதல் 4 எதிரி கள் ஆஜர். )**

**முதல் விசாரணை**

**1.** நான் சீயம்பூண்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். 1ம் எதிரி தெய்வமூர்த்தி எனது மச்சான் ஆறுமுகத்தின் மகன். ஆறுமுகத்தின் அக்கா ரத்தினத்தைதான் நான் திருமணம் செய்துள்ளேன். 2ம் எதிரி குபேந்திரன் பக்கத்து நிலத்துக்காரர். உறவினர் அல்ல. 3ம் எதிரி சுப்ராயன் எனக்கு தெரிந்தவர். 4ம் எதிரி நாராயணன் எனக்கு மச்சான் உறவுமுறை.,

2. ரொம்ப நாளைக்கு முன்னாடி ஒரு நாள் டீ கடைக்கு போனேன். அப்போது தெய்வமூர்த்தி டீ கடைக்கு வெளியே நின்று அங்கு கடையில் உள்ளவர்களை பார்த்து தாத்தா வந்தாரா என்று கேட்டார். கடையில் இருந்தவர்கள் கடைக்குள் இருப்பதாக சொன்னார்கள். உன் பேரன் கூப்பிடுவதாக என்னிடமும் சொன்னார்கள். நானும் கடைக்கு வெளியே வந்து என்ன விஷயம் என்று தெய்வமூர்த்தியிடம் கேட்டேன். ஒரு வேலை விஷயமாக மலையனூருக்கு போக வேண்டும் என்று கூறி என்னை அழைத்துசென்றார். பிறகு மலையனூரில் உள்ள ஒரு டீ கடையில் டீ வாங்கிகொடுத்தார். என்னை மட்டும் டீ குடிக்க சொன்னார். அவர் டீ குடிக்கவில்லை. எனக்கு கொடுத்த டீ குடிக்கும் அளவிற்கு நன்றாக இல்லை. அதன் பிறகு மேல்மலையனூரில் உள்ள மோகன் செட்டியாரின் வட்டிக் கடைக்கு சென்றோம். அங்கு ஏரி வேலை செய்யும் அட்டையோடு ஒரு வெள்ளை பேப்பரில் கையெழுத்து போட சொல்லி கேட்டார். நானும் கையொப்பம் போட்டேன். கையெழுத்து போடும்போது எனக்கு மயக்கம் வந்துவிட்டது. பிறகு என்னை வா போலாம் என்று கூப்பிட்ட போது என்னால் எந்திரிக்க முடியவில்லை. படியை பிடித்து கொண்டு ஏற முயற்ச்சித்தும் என்னால் போக முடியாத படி மயக்கமாக இருந்தது. அதன் பிறகு ஓட்டலில்

சென்று சாப்பிட போகலாம் என்று கூப்பிட்டார். நான் சாப்பிட வேண்டாம் என்று சொன்னேன். அதன் பிறகு எதாவது சாப்பிடு என்று சொல்லி ஓட்டலில் தோசை வாங்கி கொடுத்தார். அந்த தோசையை நானும் சாப்பிட்டேன். எனக்கு மயக்கம் அதிகமானதால் என்னால் எந்திரிக்க இயலவில்லை. அதன் பிறகு என்னை மலையனூரில் உள்ள அரசு மருத்துவமணைக்கு தெய்வமூர்த்தி என்னை இருச்சக்கர வாகனகத்தில் என்னை அழைத்து சென்றார். நான் மேல்மலையனூரில் அரசு மருத்துவமணையில் உள்ள சுவர் ஓரமாக படுத்துகொண்டேன். தெய்வமூர்த்தி செஞ்சிக்கு சென்று வருவதாக கூறி சென்றார். அதன் பிறகு மேல்மலையனூர் அரசு மருத்துவமணையில் ஓ.பி, சீட்டு வாங்கிகொண்டு மருத்துவரை பார்த்தேன். எனக்கு ஊசி போட்டார்கள். பிறகு பஸ்சை பிடித்து என் ஊருக்கு வந்துவிட்டேன். அன்றைய தினம் ஏரி வேலைக்கும் சென்றேன். அன்றைக்கே பத்திரம் வாங்கி என் சர்வே நம்பரை குறித்து எழுதி கொண்டார் தெய்வமூர்த்தி.

சாட்சி வயது முதிர்ந்த காரணத்தினால் கேட்டுக்கொண்டதன் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டடுள்ளது.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.